**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.383** **நாள் : 16.11.2025**

**அண்ணாநகர் ரவுண்டானா சாலையில் சென்னை மாநகர மக்களின் உடல் நலம் பேணும் வகையில் நடைபெற்ற Get Fit Chennai நடைபயணம் மற்றும் மிதிவண்டி பயணத்தில் கலந்து கொண்டவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச். ஆர். கௌஷிக்., இ.ஆ.ப., அவர்கள், இன்று பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் இணைந்து சென்னை மாநகர மக்களின் உடல் நலம் மற்றும் மனநலத்தை பேணுகின்ற நலவாழ்வு முயற்சியாக 01.11.2025 அன்று காலை வேளச்சேரி-தரமணி எம்.ஆர்.டி.எஸ் சாலையில் "Get Fit Chennai" எனும் நடைபயணம் (Walkathon) மற்றும் மிதிவண்டி பயணம் (Cyclothon) நிகழ்வினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், தொடங்கி வைத்து, நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கிப் பாராட்டினார்.

அதனைத் தொடர்ந்து, இன்று (16.11.2025) அண்ணா நகர் மண்டலத்துக்குட்பட்ட அண்ணாநகர் ரவுண்டானா சாலையில் Get Fit Chennai நடைபயணம் மற்றும் மிதிவண்டி பயணம் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் "Get Fit Chennai" முயற்சியின் மூலம், சென்னையில் வசிக்கும் மக்களின் உடல்நலத்தை பேணும் வகையில், நகர மக்களிடையே அதிகாலையில் எழுந்து நடைபயிற்சி மேற்கொள்ளுதல் மற்றும் மிதிவண்டி ஓட்டுதல் உள்ளிட்ட உடற்பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பழக்கத்தை ஊக்குவித்து "ஆரோக்கியமான சென்னையை" உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வானது, 4 கிலோ மீட்டர் நடைபயணம் (Walkathon), 8 கிலோமீட்டர் மிதிவண்டி பயணம், 10 கிலோமீட்டர் மிதிவண்டிபந்தயம் (Cyclothon), அண்ணா நகர் ரவுண்டானா அருகில் தொடங்கி திருமங்கலம் சிக்னல் வழியாக மீண்டும் தொடக்க இடத்தை வந்தடைந்தது. இதில் இளைஞர்கள், மாணவர்கள் உள்ளிட்ட 750க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்குபெற்றனர். இந்நிகழ்வினில் கலந்து கொண்டவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச். ஆர். கௌஷிக்., இ.ஆ.ப., அவர்கள், இன்று பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்களுக்கு டி-ஷர்ட், சான்றிதழ், பதக்கங்கள் மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டது. மக்களின் நலன் காக்கும் “Get Fit Chennai ” நிகழ்வானது சென்னையில் தொடர்ந்து நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில், தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் தலைவர் திரு.சுதாகர், அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி**